விதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு காரணமாக இருப்பதினால் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அடுத்த பணியிலே, அடுத்த வேலையிலே நாம் ஈடுபடுவோம் என்று கூறி, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

குடியிருப்புகள்

*5699—**திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டத்தை அறந்தாங்கிக்கு அருகிலுள்ள சிவந்தான்காடு கிராமத்திற்குட்பட்ட, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான சுமார் 12 ஏக்கர் நிலத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்டம் செயல்படுத்த தேர்வு செய்த இடம் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்குச் சொந்தமானது என்பதால் அந்தத் துறையிடம் இடத்திற்கான விற்பனை விலை மதிப்பு நிர்ணயிக்கக் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் அத்துறையிடமிருந்து நிலத்திற்கான விற்பனை விலை மதிப்பு நிர்ணயம் செய்து பெறப்பட்டவுடன் அடுத்த கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2013 மார்ச் 27]

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்து, கவலையைப் போக்கி, சட்டத்தின் துணை கொண்டு சரித்திரம் படைத்து விவசாயிகளின் வாழ்வில் விளக்கேற்றி வைத்த வருங்கால பாரதப் பிரதமர், மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பொற்பாதங்களை வணங்கி, அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அரசு ஊழியர் அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தன. தற்சமயம் அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்துவிழும் தருவாயில் பயன்பாட்டிற்கு உபயோகமற்ற நிலையில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் வளர்ந்துவரும் பெரிய நகரங்களில் அறந்தாங்கி நகரமும் ஒன்று. பல்வேறு அரசு அலுவலகங்களும் அறந்தாங்கி நகரில் வரப்பெற்றுள்ளன. எனவே, தேர்வு செய்யப்பட்டிருக்கும் இடம் போதுமான அளவு நகரின் மையத்தில் இருப்பதனால் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் 1986–1987–இல் அறந்தாங்கியில் 72 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டன. அதிலே இரண்டாவது தளம் மிகவும் பழுதடைந்திருப்பதால், தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து அதை இடிக்க வேண்டுமென்று கருத்துரு அனுப்பியிருக்கிறது. அந்தக் கருத்துருவை ஏற்று இரண்டாவது தளத்தை இடித்துவிட்டு அங்கு புதிதாக அரசு அலுவலர் குடியிருப்பு கட்டிக்கொடுக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், நல்ல செய்தியை இந்த மாமன்றத்திலே சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட ஆணைக்கட்டி பகுதியிலே பலதொழில்நுட்பப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு ஆணையிட்ட அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பெருநாயக்கம்பாளையம் பகுதியிலே க.ச. எண் 62, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் உள்ளது. கிட்டத்தட்ட 18 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசிடத்திலே உள்ளதா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சுய நிதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டி பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டி வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று அவருடைய தொகுதியில், அந்த இடத்தில் பொதுமக்களுடைய வரவேற்புக்கேற்ப திட்டத்தைச் செயல்படுத்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2013 *மார்ச்* 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஏற்கெனவே 300 வீடுகள் கட்டப்பட்டு அனைவரும் பத்திரம் பெற்றுவிட்டார்கள். இப்பொழுதும் வாடகை கொடுக்க முடியாத நலிவடைந்த மக்கள் நகரப் பகுதியில் இருப்பதனால் மீண்டும் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய அந்தத் திட்டத்தைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தில் வீடுகள் இல்லாது குடிசையில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழுகின்ற குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அங்கே இடம் கிடைத்தால் நிச்சயமாக அந்த நலிந்த பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

வெற்றிலைக் கொடி

***4387—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—